தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 251/2019 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.ஐயப்பன் | | | |
| **Date** | : | **04.06.2025** | | | |
| **Time** | : | **11.07 a.m to 11.54 a.m** | | | |

நி.த.சா.**1.**திரு.ஐயப்பன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 2011 ஆம் ஆண்டு வேலைக்கு சேர்ந்தேன். தற்சமயம் நான் உதவி மேலாளராக வேலை பார்க்கிறேன். நான் உதவி மேலாளராக பணிபுரியும் விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் சொல்லி உள்ளேன். (பின்னர் சாட்சி படித்துப் பார்த்துவிட்டு அந்த விவரம் சொல்லப்படவில்லை என தெரிவித்தார்) நி.சா.ஆ.1 அங்கீகார கடிதத்தில் நான் உதவி மேலாளர் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். ஜனவரி 2025 இல் இருந்து நான் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அங்கீகாரம் வழங்குவது சம்பந்தமாக எங்கள் நிர்வாகத்தில் போர்டு மீட்டிங் நடந்ததா என்றால் தெரியவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள்

என்னால் தயாரிக்கப்பட்டவை தான். நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் டிப்ளமோ ட்ரைனியாக முதலில் வேலைக்கு சேர்ந்தேன். அந்த காலகட்டத்தில் ஐடிஐ ட்ரைனிங் வேலை பார்த்தார்களா என்றால் ஆமாம். இந்த தொழிற் தாவாவில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் டிப்ளமோ படித்திருக்கிறார்கள் என்றால் ஆமாம். அவர்கள் அனைவரும் முதலில் டிப்ளமோ ட்ரைனி என்ற அடிப்படையில் தான் வேலைக்கு சேர்க்கப்பட்டார்கள் என்றால் ஆமாம். அவர்கள் ட்ரெய்னிங் முடித்த பின்னர் OED ( Operating Engineering Diploma) என்ற பதவியில் வைக்கப்பட்டார்கள் என்றால் ஆமாம். ஐடிஐ முடித்துவிட்டு வரும் தொழிலாளர்களை ஆப்ரேட்டிங் ஒர்க் மேன் என்ற வகையில் வைத்திருந்தார்கள் என்றால் ஆமாம். OED மற்றும் OW தொழிலாளர்கள் உற்பத்தி பிரிவில் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டார்கள் என்றால் இல்லை ஆப்பரேட்டிங் ஒர்க் மேன் கேட்டகிரியில் உள்ளவர்கள் மட்டும்தான் உற்பத்தி பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். OW தொழிலாளர்கள் தான் OED தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்குவார்கள் என்றால் இல்லை சீஃப் எக்ஸிக்யூட்டிவ் நிலையில் உள்ளவர்கள் தான் பயிற்சி வழங்குவார்கள் OW தொழிலாளர்கள் உடன் இருப்பார்கள். OED தொழிலாளர்கள் Job Settings, Machine running, ஆகியவற்றை செய்து வந்தார்கள் என்றால் இல்லை. டீம் லீடர்கள் என்ன வேலை செய்து வந்தார்கள் என்பது சம்பந்தமாக சொல்லியிருந்தபோது அதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் ஆமாம். OED, OW தொழிலாளர்களின் பணித்தன்மை குறித்து காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். LSW, SSPO Checklist தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். Man power chart எங்கள் நிறுவனத்தில் உள்ளது அதனை தாக்கல் செய்யவில்லை. தாவா சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடன் நான் வேலை பார்த்தேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் ஐந்து செல்களில் வேலை பார்த்தேன் என காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ACO, GIO, என்றால் தெரியவில்லை. ICS என்றால் Inter connecting Shaft ஆகும். இந்த நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரம் கூட எனக்கு தெரியவில்லை என்றாலும் அதனால் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் என்ன வேலை செய்து வந்தார்கள் என்ற விவரமும் கூட எனக்கு தெரியாது என்றாலும் தவறு. மனுதாரர் தொழிற்சங்கம் எங்கள் நிறுவனத்தில் எப்பொழுது தொடங்கப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. நான் எந்த காலத்திலும் மனுதாரர் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருந்தது இல்லை. மனுதாரர் தொழிற்சங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையே நல்ல உறவு முறை இருந்து வந்தது என்றால் ஆமாம். மனுதாரர் தொழிற்சங்கம் இல்லாமல் வேறு தொழிற்சங்கம் எங்கள் நிறுவனத்தில் செயல்படவில்லை என்றால் ஆமாம். மனுதாரர் தொழிற்சங்கம் தான் எங்கள் நிறுவனத்துடன் ஊதிய ஒப்பந்தம்

இதுநாள் வரை போட்டு வருகிறது என்றால் ஆமாம். என்னை டீம் லீடராக நியமனம் செய்ததற்கான அத்தாட்சி தாக்கல் செய்ய இயலும். Team Leader க்கான Roles and responsibilities என நிர்வாகம் ஏதேனும் நிர்ணயம் செய்துள்ளதா என்றால் இல்லை. LSW யில் உள்ளது. எங்கள் நிறுவனத்திற்கு என்று சான்றிட்ட நிலையாணை உள்ளதா என்றால் தெரியவில்லை. ஒரு தொழிலாளி தவறு செய்யும் பட்சத்தில் எதன் அடிப்படையில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் அது சம்பந்தமாக HR க்கு தான் தெரியும். உதவி மேலாளர் என்ற நிலையில் என்னுடைய Roles and responsibilities என்ன என்றால் Monthly Plan யை எட்டுவதற்காக Other Department செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது என்னுடைய வேலை. தொ.சா.ஆ.27 சசிகுமார்-(WW2) என்பவருக்கு வழங்கப்பட்ட பணி நியமன உத்தரவு என்றால் ஆமாம். 18.12.2012 தொ.சா.ஆ.30 சசிகுமார் அவர்களை Operating Engineer ஆக பணி நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் தெரியாது. தொ.சா.ஆ.31 ல் மனோகரன் என கையெழுத்து போட்டு உள்ளவர் யார் என்றால் எங்களுடைய பழைய பிளான்ட் டைரக்டர் ஆவார். தொ.சா.ஆ.33 என்ன ஆவணம் என்றால் தெரியாது. எங்கள் கம்பெனிக்கு என்று Standard Operating Procedure for consistent implementation of Employee referral policy of GKN India Policy No.19 என்ற ஆவணம்

உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தின் தாக்கல் செய்ய இயலுமா என்றால் பார்த்துவிட்டு தான் சொல்ல முடியும். தயாளன் என்பவர் எங்கள் கம்பெனியில் வேலை பார்க்கிறார் அவர் பராமரிப்பு பிரிவில் இருக்கிறார். அவர் OW ஆவார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சில தொழிலாளர்கள் தயாளனுடன் அவர் வேலை பார்க்கும் துறையில் வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் இல்லை. தயாளனுக்கு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் என்னென்ன வேலை செய்கிறார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக டீம் லீடருக்கான உத்தரவினை நான் படித்து பார்த்தேனா என்றால் மற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் எந்த உத்தரவையும் படித்து பார்ப்பதற்கு எங்கள் நிர்வாகத்தில் விதியோ அதற்கான அனுமதியோ இல்லை. நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட கடித போக்குவரத்து சம்பந்தமாக நிர்வாகம் என்னிடம் தெரிவித்தது இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட Claim Statement யை படித்து பார்க்கவில்லை. நிர்வாகம் தாக்கல் செய்த எதிர்உரை படித்து பார்த்தேனா என்றால் இல்லை ஆனால் அது சம்பந்தமாக HR உடன் கலந்து பேசி இருக்கிறேன். கலந்து பேசி என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றால் டீம் லீடர்கள் வழக்கு போட்டிருப்பதாக எனக்கு தெரிவித்தார். நான் தாக்கல்

செய்த பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தின் உள்ள விவரங்களை ஹெச் ஆர் உடன் கலந்த ஆலோசித்து தான் தாக்கல் செய்தேன். ஹெச்.ஆர் உடன் நான் பணி நியமனம் செய்யப்பட்ட தேதி மற்றும் பதவி உத்தரவு வழங்கப்பட்ட விவரம் ஆகியவற்றின் தேதி நினைவில்லாத காரணத்தினால் அது சம்பந்தமாக ஹெச்.ஆருடன் கலந்து பேசினேன். என் கீழ் மூன்று டீம் லீடர்கள் வேலை பார்த்தார்கள் அதில் இருவர் இந்த வழக்கு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் அவர்களின் பெயர் சுரேந்தர்,ஜெய் கணேஷ், மற்றொருவர் பெயர் சுந்தரமூர்த்தி ஆகும். சுரேந்தர், ஜெய் கணேஷ் ஆகியோர் என் கீழ் வேலை பார்க்க வேண்டும் என தெரிவித்த நிர்வாகம் எழுத்து மூலம் உத்தரவு கொடுத்ததா என்றால் இல்லை ஆனால் டீமை பிரிக்கும் பொழுது என்னுடைய டீமின் கீழ் அவர்களை ஒதுக்கி இருந்தார்கள். எனக்கு ஒதுக்கப்பட்ட டீமில் மொத்தம் மூன்று பேர் இருந்தார்கள். இரண்டு சூப்பர்வைசர்கள் இருந்தார்கள் அவர்களின் பெயர் ஐயப்பன், பிரதீப் ஆகும். ஐயப்பன், பிரதீப் ஆகியோருக்கும் நான் என்ன வேலை செய்வேனோ அதே வேலை செய்வது தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஐயப்பன், பிரதீப் ஆகிய இருவரும் இப்போதும் சூப்பர்வைசராக உள்ளார்கள் என்றால் ஆமாம் அவர்கள் Value Stream Leader என அழைக்கப்படுவார்கள். Value Stream Leader எங்கள் கம்பெனியில் மொத்தம் எத்தனை பேர் உள்ளார்கள் என்றால் தெரியவில்லை ஆனால்

என்னுடைய துறையில் ஏழு பேர் உள்ளார்கள். Value Stream Leader என்ற பதவி டொயோட்டோ நிறுவனத்திற்காக உருவாக்கப்பட்டது என்றால் ஆமாம். டீம் லீடர் Concept டொயோட்டா நிறுவனத்தின் Conceptக்காக எங்கள் நிறுவனத்தில் Team Leader என்ற ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது என்று சொன்னால் ஆமாம். டொயோட்டா கான்செப்ட் எங்கள் நிறுவனத்தில் தொடரும் வரை தான் டீம் லீடர் என்ற பதவி இருக்கும் அதன் பிறகு அது தொடராது என்றால் தவறு.

தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.06.11 15:54:32 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated: 04.06.2025.